# ‘கல்வியில் சிறந்த தமிழ்நாடு!’

# சமூக வலைதளங்களில் குவியும் பாராட்டு!

## இது ஸ்கிரிப்ட் அல்ல! ஒரு தகப்பனின் மனநிலை!



ஒவ்வொரு அதிகாலை எழும்போதும் வழக்கமான ஒரு படைப்பாளனாக

ஏதோ ஒரு சிந்தனையையும் கற்பனையை யும் கசக்கி கொண்டே எழுவதுதான் வழக்கம்......

இன்றைய காலை எழுந்து

இந்த இணையத்தை கையில் எடுத்து திறந்ததுமே ......

நமது முதலமைச்சரின் கல்வியில் சிறந்த தமிழ்நாடு நிகழ்ச்சி நெஞ்சை பிழிந்து விட்டது.. இன்னும் சொல்ல வேண்டுமென்றால் நெஞ்சை உருட்டிக் கொண்டிருக்கிறது நெகிழ்ந்திருக்கி றேன்..

சார் இது ஸ்கிரிப்ட் இல்லைங்க..

ஒரு அப்பாவின் மனநிலையில்

ஒரு அண்ணனின் மனநிலையில்

ஒரு தாத்தாவின் மனநிலையில்

ஒரு அக்காவின் மனநிலையில்

அந்த நிகழ்ச்சியில் அவ்வளவு பேரின் உணர்ச்சியை பார்க்க முடிந்தது ..........


**சார் இது ஸ்கிரிப்ட் இல்லைங்க..**
**ஒரு அப்பாவின் மனநிலையில்**
**ஒரு அண்ணனின் மனநிலையில்**
**ஒரு தாத்தாவின் மனநிலையில்**
**ஒரு அக்காவின் மனநிலையில்**
**அந்த நிகழ்ச்சியில் அவ்வளவு பேரின் உணர்ச்சியை பார்க்க முடிந்தது.....**


படிக்கவே முடியாது என்று வக்கற்ற சமூகத்திலிருந்து ஒரு குழந்தை நான் கணித ஆசிரியராக வேண்டும் என்று கூறியதும் ஒரு முதலமைச்சர் மேடைக்கு அழைத்து தன்னுடைய பேனாவை வழங்கி உச்சி முகர்ந்து முத்தமிட்டு வாழ்த்தி அனுப்புகிறார்....

மழை பெய்தால் கூரை வீடு முழுக்க ஒழுகுகிற ஒரு துப்புரவு தொழிலாளியின் மகன் தமிழ்நாடு அரசின் திட்டத்தால் இன்று டாக்டர் ஆகி இதே மேடையில் இதே அரசுக்கு நன்றி சொல்லும் போது இடைமறித்த முதல்வர் .... துப்புரவுத் தொழிலாளர் என்று சொல்லக்கூடாது இனி தூய்மைப் பணியாளர்கள் என்று நான் பெயர் மாற்றி விட்டேன் அப்படித்தான் சொல்ல வேண்டும் என்று மேடையில் சொல்லிவிட்டு கண்கலங்குகிறார் .....

இன்னொரு குழந்தை எனக்கு புதுமைப்பெண் திட்டத்தில் வருகிற மாதம் ஆயிரம் ரூபாயில் காது கேட்காத என் தாய்க்கு காது மிஷின் வாங்கி கொடுத்து இப்போது காது கேட்கிறது இன்னும் படிப்பேன் படித்து என் தாயையும் தந்தையையும் அவமானப்படுத்திய இந்த உலகத்தில் வென்று காட்டுவேன் என்று சொல்லி அழும்போது மேடையில் இருந்த ஆயிரக் கணக்கான அமைச்சர்கள் உட்பட அழுத நிகழ்ச்சி பார்க்க மனதை கசக்குகிறது.

இயக்குனர் மாரி செல்வராஜ் சொல்கிறார் எனக்கு திருட்டுப் பழக்கம் வந்தது பள்ளிக்கூடம் போகும்போது வாழைப் பழத்தை திருடித்தான்...

பசிக்காகத்தான் வாழைப்பழத்தை திருடி னேன். இப்போது காலை உணவு திட்டம் வழங்கும்போது அவ்வளவு மகிழ்ந்தேன் இனி இந்த குழந்தைகள் திருடமாட்டார்களே என்று........

**C.M. சார்.... வணங்குகிறேன்......**

**ஒரே ஒரு கோரிக்கை இந்த இடத்தில்..........**

**எதையாவது செய்து படிக்க விடாமல் தடுத்து விட வேண்டும் என்று ஆதிகாலத்தில் இருந்து செய்து கொண்டிருந்தார்கள்.**

**இப்போது எதையாவது செய்து படிக்க வைக்க வேண்டுமென்று நினைக்கிறார்கள்.....**

தயவுசெய்து முதலமைச்சர் யோசிக்கிற ஒவ்வொரு திட்டத்தின் வெற்றியையும் கடைக்கோடி பாமர மக்களுக்கும் கொண்டு போய் சேருங்கள் எந்த அரசியல் சாயங்களையும் தெளித்து யாரையும் புறக்கணிக்காமல்....

நன்றி CM சார்......

—பொள்ளாச்சி முருகானந்தம்

## அழவைத்து அனுப்பியது!




அரசு விழாவாச்சே, கொஞ்சம் அறுவையாகத்தான் இருக்கும் என்று நினைத்து சென்ற என்னை, என்னைப் போன்றவர்களை அழவைத்து அனுப்பியது “கல்வியில் சிறந்த தமிழ்நாடு” நிகழ்ச்சி.

செப்டம்பர் 25 அன்று மாலை சென்னை நேரு உள்விளையாட்டரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக நானும் கலந்துகொண்டேன்.

முறையான நிகழ்ச்சி தொடங்கும் முன்பு அரசுப்பள்ளிப் பிள்ளைகள் சில பாடல்களையும், நடனங்களையும் வழங்கினார்கள். அவர்களிடமிருந்து அதிகம் எதிர்பார்க்காத ஒரு மனநிலையில் இருந்த பார்வையாளர்கள் நாங்கள் திடீரென வந்து “பிள்ளை நிலா” பாடலைப் பாடிய ஒன்பது வயது சிறுமியின் திறமையைக் கண்டு அசந்துவிட்டோம்!

அடுத்த விழுப்புரம் அருகிலுள்ள ஒரு கிராமத்தி லிருந்து வந்த 16 வயது மாணவியின் கம்பீரக் குரலைக் கேட்டு நான் அதிர்ந்தே போய்விட்டேன். என்ன ஒரு குரல்வளம்! என்ன ஒரு பாடும் ஆற்றல்! பிறகுதான் தெரிந்தது, அவர் ஏற்கனவே சமூக ஊடகங்களிலும், சூப்பர் சிங்கரி லும் புகழ்பெற்றவர் என்று.

இசைப்பின்னணி எதுவுமே இல்லாத இந்த சிற்றூர் குழந்தைகளுக்கு எங்கிருந்து வருகிறது இந்த ஆற்றல் என்று மூளையைக் கசக்கினாலும் விடைகிடைப்பதில்லை. இன்று நேற்றல்ல, பல ஆண்டுகளாய் இதில் இன்னமும் தெளிவுகிடைக்காமல் இருக்கிறேன் நான்.

பின்னணி இசையற்ற குரலிசை மட்டும் வைத்து அற்புதமாய் சில பாடல்களைப் பாடி சிலிர்க்க வைத்தார்கள் இன்னொரு அரசுப்பள்ளிக் குழுவினர். அவர்களைப் பயிற்றுவித்தவர் யாரென தெரியவில்லை. அவரை எவ்வளவு வேண்டுமானாலும் பாராட்டலாம். அப்படியொரு நேர்த்தி!

நம்மூர்ப் பிள்ளைகளிடம் அவ்வளவு திறமைகள் கொட்டிக்கிடக்கின்றன. சரியான வழிகாட்டிகளையும், பயிற்சியாளர்களையும் கொண்டு இந்த அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி அதன்மூலம் அவர்களை வெளிச்சத்துக்குக் கொண்டுவருவது மெச்சத்தக்கது.

நேற்று அங்கு நடந்த நிகழ்வுகளும், அதனால் பார்வையாளர்களுக்கு ஏற்பட்ட உணர்வுகளையும் பகிர வேண்டுமென்றால் பல பக்கங்கள் எழுதவேண்டி வரும். மேலும், அவற்றை ஒருவருடைய கருத்தாகப் படிப்பதைவிட நீங்களே பார்த்து உணர வேண்டுமென்று நான் அறிவுறுத்துகிறேன்.

இது தொலைக்காட்சியில் வரும் என நினைக்கிறேன். தயவு கூர்ந்து அதை தவறா மல் பார்த்துவிடுங்கள். மிகப்பெரிய வாழ்வியல் படிப்பினை எல்லாம் இயல்பாக, எளிதாக அதன்மூலம் கிடைக் கும். இது மிகைப்படுத்தல் அல்ல.

நேற்றிரவு செய்திகளில் சில காட்சிகளைக் கண்டிருப்பீர்கள். அரங்கமே கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருந்ததைப் பார்த்திருப்பீர்கள்; அமைச்சர்கள் தொடங்கி, அடியேன் வரை. ஒரு முறை இருமுறை அல்ல; பலமுறை.

இந்த அரசின் புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன், நான் முதல்வன் திட்டங்கள் மூலம் உயர்ந்து வந்தவர்கள் பலரை அழைத்துவந்து மேடையில் நிறுத்தி பேசவைத்தார்கள்.

ஒவ்வொரு பிள்ளையும் இந்தத் திட்டங்கள் மூலம் அவரவர் குடும்பக் கதைகளையும், எப்படி அவர்கள் வாழ்விலும், குடும்பத்திலும் அற்புதமான மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன என்பதையும் அவர்கள் விவரிக்க விவரிக்க யாராலும் விம்முவதைத் தவிர்க்கவே முடியவில்லை.

என்னை வியப்பிலும், மகிழ்ச்சியிலும் ஆழ்த்திய, அங்கு பேசிய எல்லா பிள்ளைகளிடமும் இருந்த ஒரு பொதுவான குறிப்பிட்ட அம்சம் என்னவென்றால்,

**“எனக்காகக் கடுமையாக உழைத்த, பல தியாகங்கள் செய்த, என்னை ஊக்குவித்த, பலர் அறிவுரைகளையும் எதிர்த்து என்னைப் படிக்கவைத்த என் பெற்றோரை தலைநிமிரச் செய்வேன், அவர்களை சிம்மாசனத்தில் அமரவைத்துப் பார்ப்பேன், அவர்களுக்கு நன்றிக்கடன் செய்வேன், அவர்கள்தான் என் வாழ்வு, லட்சியம்”**

என்று சொன்னதுதான். இந்த குடும்ப உணர்வு, மாண்பு பிற நாடுகளில் இருக்கும் வாய்ப்பு குறைவுதான் என நினைக்கிறேன்.

ஒரு நல்ல அரசு எப்படி தனிப்பட்டவரின் சிந்தனையையும், வாழ்வையும் மாற்றியமைக்க இயலும் என்பதை இன்னொரு முறை உணர்ந்தேன்.

சுருக்கமாக இருவருடைய கதைகளைப் பகிர்கிறேன்.

10ம் வகுப்பு படித்துமுடித்து மேலே படிக்க ஆசைப்பட்ட ஒரு சின்ன கிராமத்துப் பெண்ணை, தாய்மாமனுக்குக் கட்டிக்கொடுத்துவிட்ட பெற்றோர். பிள்ளை பெற்று வளர்த்துக்கொண்டிருந்த போதிலும் படிக்கும் தாகம் அடங்கவே இல்லை அந்தப் பெண்ணுக்கு. கணவனிடமும் பகிர, அவரும் சரியான தருணம் வரட்டும், பார்க்கலாம் என சொல்ல, மகன் வளர்ந்து, 12ம் வகுப்பு முடித்து கல்லூரியும் செல்கிறான்.

இந்த சமயத்தில் புதுமைப்பெண் திட்டம் வர, அதற்கு விண்ணப்பிக்க, இப்போது அம்மாவும் பையனும் ஒரே கல்லூரியில், ஒரே பாடத்தில், ஒரே வகுப்பில் சக மாணவர்.

பெண்களுக்கு அரசு தரும் 1,000 ரூபாயை பலவிதமாக நக்கல் செய்பவரும் உண்டும். ஆனால் நேற்று தன் கதையைப் பகிர்ந்த ஒரு கிராமத்துப் பெண்பிள்ளையின் கதையைக் கேட்டால்தான் தெரிகிறது அது எவ்வளவு பெரிய விஷயமென்று!

**அந்த ஆயிரம் ரூபாயை எப்படியெல்லாம் பிரித்து, ஒவ்வொரு ரூபாயையும் கணக்கிட்டு செலவுசெய்து தன் படிப்பையும், கொஞ்சம் வீட்டின் பராமரிப்பையும் பொறுப்பாகப் பார்க்கிறார் என்பது விளங்கியது. அதில் ஒவ்வொரு மாதமும் 100 ரூபாயை சேமித்து, காதுகேளாத தன் அம்மாவுக்கு காதுகேட்கும் கருவி (Hearing aid) வாங்கிக்கொடுத்து, அரங்கத்திற்கும் அழைத்து வந்து, “இப்போ நான் பேசுறத என்னோட அம்மா கேட்டுட்டு இருக்காங்க” ன்னு சொல்லி, அவர்களையும் எழுந்து நிற்க வைத்து, அவர்களோடு சேர்ந்து நம்மையும் தேம்பித் தேம்பி அழவைத்த நிஜவாழ்வுக் கதைகளும் உண்டு.**

—ஜேம்ஸ் வசந்தன்

## பாராட்டுவதற்கு ஏராளமான செய்திகள் இன்னும் இருக்கிறது!



கல்விக்காக தான் எதிர்கொண்ட போராட்டங்களையும் தமிழ் நாடு அரசின் திட்டங்களால் தன் கனவு நிறைவேறியதையும் கூறிய இந்தப் பெண் “சார் எனக்கு மேத்ஸ்(கணக்கு) டீச்சர் ஆகணும்னுதான் ஆசை சார்“ என்றவுடன் “ மேத்ஸ் டீச்சர் இங்க வாங்க” என்று அழைத்து அவரை உச்சி மோந்து பாராட்டி பேனாவை பரிசளித்த முதல்வரின் பரிவும் அன்பும் தான் ஒரு தலைவரின் இலக்கணம்.

**நான் மிக ரசித்த மற்றொன்று**

**அந்தப் பெண்ணின்**

**“நிமிர்ந்த நன்னடை;**

**நேர் கொண்ட பார்வை”**

இன்னும் சொல்வதற்கும் பாராட்டுவதற்கும் ஏராளமான செய்திகள் இருக்கும் அந்த விழாவில் அவை அனைத்தையும் தவிர்த்துவிட்டு காட்சிப்பிழை போன்ற ஒன்றை மட்டும் கத்தரித்துப் பரப்புகிறார்கள். அதனால் ஈர்க்கப்பட்டு பேசவேண்டிய பெருமைக்குரிய செய்திகளைப் பேசாமல் வெறும் விமர்சனப் பதிவுகளை இடுபவர்களும் பேசுபவர்களும் கொஞ்சம் நிதான மாக தனது மனச்சாய்வை ஆய்வு செய்ய வேண்டும்.

மற்றபடி காலில் விழும் கலாச்சாரத்தை ஒழிப்பது குறித்து நிறைய பேச வேண்டும். அதைத் தனியே பேசுவோம்!

—அண்ணாமலை அருள்மொழி

## மாநில அரசே எழுந்து நிற்கிறது!



இந்தப் படம் உண்மையிலேயே மனதைத் தொடுகிறது.

கல்லூரியில் சேரவேண்டும் என்று மூன்று நாள் பட்டினி கிடந்து போராடிய மாணவி சுப்புலட்சுமி. இப்போது, திருமணம் ஆன பிறகும் தன் படிப்பைத் தொடர்கிறார். ஒரு கணக்கு டீச்சர் ஆக வேண்டும் என்பது இவரது கனவு.

அரசு வழங்கும் கல்வி உதவியால், இன்று தன் கல்விச் செலவுகளுக்கு யாரையும் எதிர்பார்க்காமல், சுயமாக நிற்கிறார்.

அவரது கல்வி ஆர்வத்தை, விடாமுயற்சியைப் பாராட்ட, மாநில அரசாங்கமே எழுந்து நிற்கிறது. முதலமைச்சரே அழைத்துப் பரிசளித்து ஒரு தந்தைக்கே உரிய வாஞ்சையுடன் உச்சிமுகர்ந்து முத்தமிடுகிறார். இந்தக் காட்சி எத்தனையெத்தனை பெண்களின் மனதில் கல்வி என்னும் உன்னத மரத்துக்கான ஆசையை விதையாகத் தூவும் என்று எண்ணிப்பார்க்கிறேன்.

இப்படித்தான் கல்விக்கு ஆதரவளிப்பது மட்டுமல்லாமல், எல்லோரும் பார்க்கும்படி அதை ஒரு கொடியைப் போல உயர்த்தி ஏந்தவேண்டும்.

இப்படித்தான் விழுமியங்கள் உயிர்பெறுகின்றன.

—பயணிதரன்

## நான் மிகவும் உணர்ச்சி வசப்பட்டேன்!

Lakshmi Subramanian
@lakhinathan

In these 26 years of my journalism career I have covered war, genocide, conflict, natural disaster, pandemic and many more. Met 100s and 1000s of people who have suffered the maximum in their lives, people who have lost their lives ones to conflict, war and natural disaster. There were days when I had to write about heaps of deadbodies being buried after a natural disaster. But never ever in these 26 years I have become this emotional. Watching a young student saying that she bought a hearing aid for her physically challenged mom, using the Rs. 1000 cash dole she gets through the Pudumai Pen scheme, shook me. Tears ran down my cheeks as the entire crowd in the hall turned back to look at her parents turning emotional.
The event being கல்வியில் சிறந்த தமிழ்நாடு.

குறள்: கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு மாடல்ல மற்றை யவை.

—லட்சுமி சுப்பிரமணியன்

## முதல்வர் ஏராளமான வாய்ப்புகளை உருவாக்குகிறார்

Show me a “Leader” like Muthuvel Karunanithi Stalin in India in 2025, addressing citizens: "Even if you get a job opportunity after your undergraduate studies, even if you go for higher positions, do not stop pursuing postgraduate and research studies; explore the world." The leader (himself) creates more opportunities and continuously encourages citizens toward education and employment.

வாழ்க நீர்! எம்மான்!

—முனைவர் கணேசு, ஜப்பான்

## அப்பா! அப்பா!



**மகள்களை பெற்ற அப்பாக்களுக்கு தான் தெரியும் தன் குழந்தை தலைநிமிர்ந்து நிற்பது எவ்வளவு பெருமை என்பது அப்பா அப்பா**

—சாக்ஸா சேவியர்

## ஏழைக் குழந்தைகளுக்கு உதவிக்கரம் நீட்டுகிறார்கள்!




கல்வியில் சிறந்த தமிழ்நாடு மிகவும் நெகிழ்வான விழாவாக நடந்தது மேடையேறியவர்களெல்லாம் கூலித்தொழிலாளிகளின் பிள்ளைகள்..

அரசு உதவியால் படிக்கும் மாணவர்கள், அரசின் மானியத்தொகையுடன் வெளிநாட்டில் படிக்கும் மாணவர்கள், நான் முதல்வன் திட்டத்தால் வெளிநாட்டில் வேலைக்குச் சேர்ந்த மாணவர்கள் கல்லூரியில் படிக்கிற பெண்களுக்கு த் தரப்படும் ஆயிரம் ரூபாயைச் சேர்த்து வைத்து காது கேளாத அம்மாவுக்கு காது கேட்கும் கருவி வாங்கித்தந்த மாணவி விளையாட்டுக்கு ஊக்கமும் உதவியும் பெற்று அரசு வேலையும் பெற்றிருக்கும் மாணவர்கள் என பலர் இந்த அரசின் கல்வி உதவிகளுக்கான சாட்சியங்களை நெகிழ்வாக எடுத்து வைத்தார்கள்.

**இதை‘ கிரிஞ்ச்’ என்று ஏகடியம் செய்யும் சில பதிவுகளையும் பார்த்தேன், மதிய உணவுத்திட்டத்தாலும் சத்துணவுத்திட்டத்தாலும் பசியாறியவர்களுக்கு இந்தப்பிள்ளைகள் பெறும் கல்வியின் மகத்துவம் புரியும்..**

**இந்த உதவிகள் இல்லாவிட்டால் இந்தக்குடும்பங்களின் அடுத்த தலைமுறையும் கூலிவேலைக்குத்தான் போயிருக்கும் லட்சங்களைக்கொட்டி பெருமைக்குப் பெரிய பிராண்டான கல்விக்கூடங்களில் சேர்க்கும் எலைட் மக்களுக்கு அரசுப்பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளின் கதைகள் கிரிஞ்சாகத்தான் தெரியும்**

சட்டக்கல்லூரியில் படிக்க விரும்பிய ஒரு கிராமத்து மாணவன் CLAT தேர்வு எழுத நாலாயிரம் ரூபாய் கட்டணம் கட்ட வழியில்லாமல் தன் ஆசையைக் கைவிட நினைத்த போது ஒரு ஆசிரியர் நான் முதல்வன் திட்டத்தின் மூலம் அந்தக்கட்டணத்தைப் பெற்றுத்தந்திருக்கிறார்,

அந்த நாலாயிரம் சிலருக்கு ஒரு சட்டை அல்லது புடவையின் விலை, நேர்மையான வழக்கறிஞராகப் பணியாற்றி என்றாவது ஒரு நாள் உச்சநீதிமன்றத்தின் நீதிபதியாவேன் என்று சொன்ன ஒரு கூலித் தொழிலாளியின் மகனுக்கு அந்த நாலாயிரம் ஒரு தலைமுறைக்கனவுக்கான முதல்படி பொம்பளைப்புள்ளைக்கு படிப்பெதுக்குன்னு அப்பா அம்மா சொல்லிட்டாங்க, மூணு நாள் சாப்பிடாம கெடந்து காலேஜ் போறதுக்கு அனுமதி வாங்கினேன்..

அங்க போனா கல்லூரிக்கட்டணத்துக்குப் பணம் பத்தல, என்ன செய்யறதுன்னு புரியாம நின்னப்ப அங்கிருந்த லெக்சரர் மேடம் பணம் கட்டி சேத்துவிட்டாங்க, புதுமைப் பெண் திட்டத்துல எனக்கு அரசாங்கம் ஆயிரம் ரூபா கொடுத்தாங்க, அதை வாங்கி மேடமுக்கு பணத்தைத் திருப்பிக் கொடுத்தேன், அவங்க வாங்கவே மாட்டேன்னாங்க, வற்புறுத்திக் கொடுத்தேன் என்று சொன்ன ராணிப்பேட்டை ரம்யா என்னும் குழந்தைக்கு அந்த ‘வெறும் ஆயிரம் ‘ தன்மானத்தின் பெருமிதம், கணக்குத்துறையில் பேராசிரியராக வேண்டும் என்று தன் ஆசையைச் சொன்ன அந்தக்குழந்தைக்குத்தான் முதல்வர் பேனா பரிசளித்தார்..

பத்து மைல் சைக்கிள் மிதித்துக் கொண்டு பள்ளிக்குப்போன எனக்கு பைக் வாங்கவேண்டுமென்பது பெரும் கனவு என்று சொன்ன மாணவனுக்கு நான் முதல்வன் திட்டத்தில் ஏவியேஷன் படிக்கும் வாய்ப்புக்கிடைத்திருக்கிறது, பைக்கில் போவதைக் கனவு கண்ட எனக்கு பறக்கும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது என்றான் மாணவன்


**இதை‘ கிரிஞ்ச்’ என்று ஏகடியம் செய்யும் சில பதிவுகளையும் பார்த்தேன், மதிய உணவுத்திட்டத்தாலும் சத்துணவுத்திட்டத்தாலும் பசியாறியவர்களுக்கு இந்தப்பிள்ளைகள் பெறும் கல்வியின் மகத்துவம் புரியும்..**
**இந்த உதவிகள் இல்லாவிட்டால் இந்தக்குடும்பங்களின் அடுத்த தலைமுறையும் கூலிவேலைக்குத்தான் போயிருக்கும் லட்சங்களைக்கொட்டி பெருமைக்குப் பெரிய பிராண்டான கல்விக்கூடங்களில் சேர்க்கும் எலைட் மக்களுக்கு அரசுப்பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளின் கதைகள் கிரிஞ்சாகத்தான் தெரியும்**


சேலத்தில் தறி நெய்யும் ஒருவருடைய மகள் நூறுசதவீத உதவித்தொகையுடன் மலேசியாவில் படிக்கிறார், வெளிநாட்டுக்கு வந்து படிப்பேன்னு நான் கனவுகூடக் கண்டதில்லை என்கிறார் அந்த மாணவி

உசிலம்பட்டியைச் சேர்ந்த மனோஜ் மாற்றுத்திறனாளி, அரசு தந்த ஊக்கத்தால்

அவர் விளையாட்டுத்துறையில் உலக சாதனைகளைப் படைத்திருக்கிறார்

அரசு நிறுவனமான TNPL ல் அதிகாரியாகவும் அவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.. என் உயர்வுக்குக் காரணமான விளையாட்டுத் துறை அமைச்சரான உதயநிதி ஸ்டாலினுக்கு மரியாதை நிமித்தமாக என் திருமணப் பத்திரிகை வைத்தேன், அவர் என் கிராமத்திற்கே வந்து என் திருமணத்தை நடத்தி வைத்தார் என்று நெகிழ்ந்தார் மனோஜ்

இவ்வளவு திட்டங்களும் வாய்ப்புகளும் இருப்பதும், அதனால் இத்தனை பேர் பலன் பெற்றிருப்பதும் இந்த விழா மூலமாகத்தான் விரிவாகத் தெரிந்தது.. இதுபோன்ற திட்டங்களை இன்னும் விளம்பரப்படுத்துவது அவசியம்

முதல்வரும் இதற்குக் காரணமான அமைச்சர்களும், அதிகாரிகளும் போற்றுதலுக்குரியவர்கள்.. அகரம் இதைச் செய்தபோது பாராட்டியவர்களுக்கு இந்த அரசு செய்யும்போது ‘கிரிஞ்சாக’த் தோன்றுமானால் அது திராவிட ஒவ்வாமைதான்..

இப்படிப்பட்ட குழந்தைகளை இவ்வாறாக உயர்த்திக் காட்டுவதுதான் திராவிடக் கருத்தியல், இதைத் தூற்றுபவர்கள் வலதுசாரிகளாக இருக்கமுடியும் எல்லா நேரங்களிலும் இந்த அரசை தூக்கிக் கொண்டாடவேண்டிய அவசியமில்லை, நல்லதைப் பாராட்டுவதே அல்லதைக் கண்டிப்பதற்கான தகுதியாக நான் காண்கிறேன் இறுதியாக ஒன்று முதல்வர் ஸ்டாலினோ, துணை முதல்வர் உதயநிதியோ அரசுப்பள்ளிகளில் சத்துணவுக்குத் தட்டேந்தி நின்றவர்களல்லர்..

அவர்கள்தான் எல்லா வசதிகளும் செய்து தருகிறோம் படித்து மேலே வாருங்கள் என்று ஏழைக் குழந்தைகளுக்கு உதவிக்கரம் நீட்டுகிறார்கள் அரசுப்பள்ளிகளில் படித்து, சத்துணவை உண்டவர்கள் முதல்வராக இருந்தபோதுதான் ஏழைக்குழந்தைகளின் படிப்பைக் காவு கேட்கும் NEETஐக் கொண்டுவந்தார்கள், மாநில அரசின் வேலைகளை மற்ற மாநிலத்தவர்களுக்கும் வாரிக்கொடுக்கும்படி சட்டத்தைத் திருத்தினார்கள்

அதைவிட நம் ஏழைபங்காளி அண்ணன் படிப்பெதற்கு, ஆடு மேய்க்கப் போங்கள், குலத்தொழிலைப் பாருங்கள் என்கிறார்,

இந்த முரணை எப்படிப் புரிந்து கொள்வது..?

—கவிதா பாரதி